முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 628**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

18.06.2021, வெள்ளிக்கிழமை

1. வள்ளலே வாழுகின்ற ஞானியே
வையகத்தை காக்கவந்த தவசியே
இல்லாமை போக்கி இந்தகலியுகத்தை
எல்லா வளமும்கொண்ட ஞானயுகமாக்க
2. ஆக்கவே எந்தன் அவதாரமாக வந்த
அரங்கனே ஞானதேசிகனே
ஆக்கமுடன் சுப்ரமணியர் யானும் உமக்கு
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
3. ஆசியதும் அரங்கன் தொண்டர் படை மூலம்
அகிலமே பெருமாற்றம் காணஇருக்க
வாசிவென்ற ஞானியர் கூட்டங்களை
வல்லமைபட அரங்கனுக்கு துணைசேர்ப்பேன்
4. துணைசேர்த்து அரங்கன் தொண்டர்கள் மூலம்
தூய ஞான உலகம் படைக்க
இணையில்லாத மகா சக்தியாக தர்மம் வளர்க்கின்ற
இயம்பிடுவேன் ஞானதேசிகன் கொள்கையின் வழி
5. வழிதன்னில் உலகோரை ஒன்றிணைத்து
வழிமொழிந்து அரங்கனை தலைமையாக்கி
பழிபாவ நிலைகள் இனி உலகில் இல்லா
பரோபகார பண்புமிக்க ஞானயுகம் படைப்பேன்
6. படைக்கவே அரங்கனுள் யானிருக்க
பழுதில்லை அரங்கன் தொடர்புகொண்ட மக்களுக்கு
மக்களுக்கு எல்லா பாதுகாப்பும்
மண்ணுலகை காக்கின்ற மகா சக்தியும்
7. சக்தியும் சரவண ஜோதியுமான ஆற்றலும்
சடாட்சர பலமுமாக அவர்கட்கு வரங்கள்பல கூடி
இடரின்றி அரங்கன் வழி உலகை
இணைந்து உலக மாற்றம் செய்யும் வல்லமை கிட்டும்
8. கிட்டவே அரங்கன் ஞானமே உலகை காக்கும்
குறையில்லாத அரங்கன் தர்மமே உலகை மாற்றும்
தட்டாது ஓங்காரக்குடிலின் ஞானி
தர்மத்தின் காவலன் அரங்கன் வழிவர

9. வருகின்ற மக்கள் படை மூலமே
வையகம் ஞானிகள் நிறைந்த பூமியாகி
தருகின்ற அரங்கன் தர்மத்தாலே
தர்மபலம் கூடி உலகமே ஞானயுகமாகும் ஞானயுக மாற்றம் பெறும்

10. மாற்றம் தரும் கலியின் சிறந்த ஞானி
மக்களை மீட்கும் மகா தவசி
ஆற்றல்பெற்ற உலகமக்கள் மூலமே
அகிலத்தை ஆறுமுகன்யான் அற்புதம்பட மாற்றி அருள்வேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.